THE WORLD NEEDS THE WORD
IBT

ஜூலை 2025
மலர் 23, இதழ் 10

சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

திருமறையில் அதிகம் பேசப்படாத பெண்கள்

திருமறையில் அதிகம் பேசப்படாத பெண்கள்

‘‘...இஸ்ரவேல் மக்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள்...’’ (யாத். 1:12).

பொதுவாக மனிதனின் குணம் என்னவென்று பார்த்தால் அடுத்தவர்களை ஒடுக்குவது; தங்களை மீறி அடுத்தவர்கள் எதுவும் செய்யக்கூடாது என்று எண்ணுவார்கள். மனிதனுக்கே இத்தகைய தீய எண்ணம் இருக்கும் போது, ஒரு தேசத்தை ஆளும் ராஜாவுக்கு தன் எதிரிகள் பலுகிப் பெருகி வாழ்வதைக் கண்டால் எப்படியிருக்கும். எவ்வளவு தான் எபிரேயர்களைக் கஷ்டப்படுத்தினாலும், அவர்கள் நல்ல திடகாத்திரமாகவும், வலிமை-யாகவும் இருப்பதைக் கண்டு, எகிப்தை ஆண்ட பார்வோனுக்கும் மற்ற உயர் அதிகாரிகளுக்கும் வெறுப்பாக இருந்தது. எபிரேயர்களின் ஜீவனைக் கசப்பாக்கி, மிகவும் கொடுமையாய் நடத்தினார்கள்.

பார்வோனின் திட்டம்: எகிப்து தேசத்தின் மன்னர்களுக்கு தனிப்பட்ட பெயர்கள் இருந்தாலும், அவர்கள் பார்வோன் என்றுதான் அழைக்கப் பட்டனர். எபிரேயப் பெண்களுக்கு மகப்பேறு / பிரசவம் பார்க்கும் இரண்டு எபிரேய மருத்துவப் பெண்கள் இருந்தார்கள் (Midwives). இவர்கள் அந்நாட்டின் பெண்களுக்கு மகப்பேற்றில் உதவி வந்தார்கள். அவர்களுடைய பெயர் **சிப்பிராள், பூவாள் (Shiphrah, Puah)**. இவர்களது பெயரின் அர்த்தம் **“அழகு”, “சிறப்பான”** என்பதாகும். விவிலியத்தில் யாத். 1 : 15-இல் இந்த இரண்டு பெண்களையும் எபிரேயப் பெண்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அநேக திருமறை அறிஞர்கள் இந்தப் பெண்கள் எபிரேயர் மத்தியில் பணி செய்த எகிப்திய மருத்துவச்சிகளாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். மேலும் எகிப்தியப் பெண்களாக இருந்த காரணத்தால் தான், பார்வோன் அவர்களை அழைத்து கீழ்க்கண்டவாறு பேசுகிறான்... அவன் கூறிய முதல் கட்டளை:

நீங்கள் எபிரேய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும் போது, ...ஆண் பிள்ளையானால் கொன்று போடுங்கள். பெண் பிள்ளையானால் உயிரோடிருக்-கட்டும் என்றான் (யாத். 1:16).

<u>பார்வோனின் இரண்டாம் கட்டளை</u>

... எபிரேயப் பெண்களுக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டு விடவும், பெண் பிள்ளைகளை-யெல்லாம் உயிரோடு வைக்கவும் தன் ஜனங்கள் எல்லோருக்கும் கட்டளையிட்டான் (யாத். 1:22).

தேவனுக்குப் பயந்து வாழ்ந்த சிப்பிராள், பூவாள் இரண்டு பேரும் பார்வோனிடம் என்ன கூறினார்கள்.

அரசே! எபிரேய ஸ்திரீகள் எகிப்திய ஸ்திரீகளைப் போல் அல்ல. அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள். நாங்கள் போகுமுன்னே பிரசவம் ஆகி விடுகிறது என்றார்கள் (யாத். 1 : 19). ஆகவே, பார்வோன் இரண்டாவது கட்டளையைப் பிறப்பித்தான்.

தேவனுக்குப் பயந்த மருத்துவச்சிகளின் குடும்பங்கள் தழைக்கும்படி தேவன் செய்தார். *‘‘...கர்த்தருக்கு பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்...’’ (2 நாளா. 19 : 7).* இந்த வசனத்திற்கு ஏற்ப பார்வோனுக்கு எதிராக எந்தக் காரியத்தையும் துணிந்து செய்ய தயாராயிருந்தார்கள். பார்வோனின் இரண்டு

கட்டளைகளையும் துணிந்து மீறினார்கள். அரசனின் அநீதியான கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் தைரியத்துடன் குழந்தைகளை கொல்லாமல் விட்டார்கள்.

ஆனால், இக்காலத்தில் ஜனங்கள் அப்படி அல்ல. அதிகாரிகள் தங்கள் பதவிக்காகவும், மற்ற சலுகைக்காகவும் ஆட்சிபுரிபவர்களின் அநீதியான கட்டளைகளுக்கு மனமுவந்து கீழ்ப்படிவது மட்டுமின்றி, அவர்களை பிரியப்படுத்துவதற்காக நீதியற்ற செயல்களில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். நாம் யாரைப் பிரியப்படுத்துகிறோம்? தேவனையா அல்லது அதிகாரத்தில் இருப்பவர்களையா?

நேபுகாத்நேச்சாரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்து, நெருப்புக்குள் தள்ளப்பட்ட சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோவையும் (தானி. 3 : 16-18) பார்த்த அரசனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர்களோடு சேர்ந்து தேவ புத்திரனுக்கு ஒப்பான ஒருவரும் (4 பேர்) விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுவதை ராஜா தன் சொந்த கண்களால் கண்டான். மூன்று பேரும் அரசனை நோக்கி கூறின வசனங்களையும், வார்த்தைகளையும், சொற்களையும், எதினாலும் அழிக்கவே முடியாது.

தானி 2 : 17, 18 வசனங்கள் மூலம் அரச கட்டளைக்குப் பணிந்து போகாமல், தைரியத்துடன் எதிர்த்து நின்றபடியால், நெருப்பிலே தம்முடைய பிள்ளைகளுக்காக தேவனே இறங்கி காத்துக் கொண்டார். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ மூன்று பேரும் அக்கினியின் வாசம் கூட உடம்பிலோ, ஆடையிலோ தெரியாமல் காப்பாற்றப்பட்டனர்.

சூசான் அரண்மனையில் இருந்த யாவரும் (அரசனைத் தவிர) ஆமானை வணங்கி, நமஸ்கரித்து வந்தார்கள். ஆனால், அரண்மனையின் வாசலில் இருந்த மொர்தெகாய் மட்டும் ஆமானின் கட்டளைக்கு அடி பணியவில்லை. ஆமானை வணங்கவுமில்லை. நமஸ்காரிக்கவும் இல்லை (எஸ்தர் 3 : 2).

ரோமர் 13 : 1-இல் பார்த்தோமானால், "*எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்...*" என்று வேதம் கூறுகிறது. ஆனால், அநியாயத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை.

சிப்பிராள், பூவாள் இரண்டு மருத்துவச்சிகள் சொன்னது முற்றிலும் பொய்யல்ல. கடினமான உழைப்பினால் வலிமையோடு இருக்கும் பெண்கள் எளிதில் குழந்தை பெறுவது இயற்கையே. ஆனால், ஒன்றுமறியாத குழந்தைகளைக் கொலை செய்ய பார்வோனின் கட்டளைக்கு உடன்பட மாட்டோம் என்று வாழ்ந்ததால், கர்த்தர் அவர்களின் குடும்பங்களை ஆசீர்வதித்தார்.

பார்வோனின் கட்டளை பாரபட்சமாகக் காணப்பட்டது. எபிரேய ஆண் குழந்தைகளை மட்டும் நதியில் போட உத்தரவிட்டான். எகிப்தியருக்கு இந்தக் கட்டளை இல்லை. ஒரு தேசத்தை ஆளும் அரசன் தன் இனத்தாராகிய எகிப்தியருக்கு ஒரு சட்டம், தன்னுடைய தேசத்திலே தங்களுக்காக அடிமை வேலை செய்யும் எபிரேயர்களுக்கு வேறு ஒரு சட்டத்தையும் கட்டளையாக ஆணையிடுவது முற்றிலும் தவறு. ஒரு தேசத்திற்கு ஒரே சட்டத்தை கட்டளையாக பிறப்பிப்பதே சரியான அரசாட்சி.

பார்வோனின் கட்டளை பிறந்த மூன்று வருடத்திற்குள் மோசே பிறந்தான். மோசேக்கு ஒரு அண்ணனும் (ஆரோன்) ஒரு அக்காவும் (மிரியாம்) இருந்தார்கள். ஆரோன் பிறந்த பின்பு பார்வோனின் கட்டளைப் பிறந்தபடியால் ஆரோனுக்கு எந்தப் பிரச்சனையும் வரவில்லை.

லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்

பண்ணினான். அந்தப் பெண் கர்ப்பவதியானாள் (யாத். 2 : 1,2). குழந்தை கர்ப்பத்திலே உருவான நாள் முதல் அந்தக் குழந்தையின் பெற்றோர்களாகிய அம்ராம், யோகெபேத் இருவருக்கும் உள்ளத்திலே ஒரே போராட்டமாக இருந்திருக்கும். பத்துமாத போராட்டத்திற்குப் பின் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைதான் மோசே.

மோசே பிறந்த போது அவனுடைய தாய் தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, தேவனுடைய கிருபையினாலே காப்பாற்ற முடியும் என்று விசுவாசித்ததால், அரசனுடைய கட்டளைக்குப் பயப்படாமல் மூன்று மாதம் வரைக்கும் ஒளித்து வைத்து காப்பாற்றினர் (எபி. 11 : 23). சிக்கலான சூழ்நிலைகள் வரும்போது அதனை மேற்கொள்ளும் வழியைக் கண்டு தேவன் மீது நம்பிக்கையோடு முயற்சி செய்ய வேண்டும்.

திருமறையில் அதிகம் பேசப்படாத பெண் மோசேயின் மூத்த சகோதரியான **மிரியாம்.** இந்தப் பெயருக்கு அர்த்தம் கசப்பு. யாத்திராகமம் புத்தகத்தின் துவக்கத்திலே பெயர் குறிப்பிடப்படாத சிறுமியாக அறிமுகப்படுத்தப்படுகிறார். விவிலியத்தில் முக்கியப் பெண் தலைவர்களில் ஒருவராக காணப்படுகிறார்.

மூன்று மாதத்திற்குப் பிறகு வீட்டில் வைத்து வளர்க்க முடியாத சூழ்நிலையில், குடும்பமே ஒன்றாகச் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தீட்டுகிறார்கள். ஒரு நாணற் பெட்டியைச் செய்து, தண்ணீர் எதுவும் பெட்டிக்குள் புகுந்துவிடாதபடி பிசினும், கீலும் பூசி, குழந்தையை உள்ளே படுக்க வைத்து, யாரும் இல்லாத சமயம் பார்த்து நைல் நதியின் ஒரு ஓரமாய் நாணற்புற்கள் அடர்த்தியாக உள்ள இடத்தில் தாயானவள் வைத்தாள். ஆரோனுக்கும், மோசேக்கும் மூன்று வயதுதான் வித்தியாசம். யாத். 7 : 7-இல் பார்த்தால் மோசேக்கு எண்பது வயதும், ஆரோனுக்கு எண்பத்து மூன்று வயதுமாயிருந்தது. அப்படியானால் ஆரோனைவிட இரண்டு வயது வித்தியாசத்தில் மூத்த சகோதரி மிரியாம் காணப்படலாம்.

நைல் நதியின் ஓரத்தில் நாணற்பெட்டியை குழந்தையுடன் விட்டுவிட்டு தாய் யோகெபேத் வீட்டிற்குச் சென்று விடுகிறாள். ஆனால், மூத்த சகோதரியாகிய அந்த சிறுமி தன்னுடைய குட்டித் தம்பிக்கு என்ன நடக்கும், தண்ணீரில் மூழ்கிப் போவானோ, பசிக்கு அழுதால் அந்த சத்தத்தை யாராவது கேட்டால் கொன்று போடுவார்களோ என்று பலவாறாக தன்னுடைய மனதில் போராட்டத்தோடு, என்ன நடக்கும் என்று கலங்கியவாறு தூரத்திலே நின்று கவனித்துக் கொண்டிருந்தாள்.

குளிக்க வந்த பார்வோனின் குமாரத்தி அந்தப் பெட்டியைக் கண்டாள். கொண்டு வரும்படி பணித்தாள். பெட்டியைத் திறந்த போது பிள்ளையைக் கண்டாள். அதுவரை அழாத குழந்தை அழுதது. மூன்று மாதமாக தன் தாயின் முகத்தை மட்டும் பார்த்திருந்த குழந்தை வேறு முகத்தைக் கண்டதால் அழுதது.

பார்வோன் குமாரத்தி அக்குழந்தையின் மீது **இரக்கமுற்று,** இது எபிரேயர் பிள்ளைகளில் ஒன்று என்றாள். கட்டளை பிறந்த இடத்திற்கே குழந்தை வந்து சேர்ந்தது; இது தேவாதி தேவனுடைய திட்டம்.

தைரியமான துணிச்சலான பெண் :

அப்பொழுது மிரியாம் பார்வோன் குமாரத்தியை நோக்கி, *''உமக்கு இந்த பிள்ளையை வளர்க்கும்படி எபிரேய ஸ்திரீகளில் பால் கொடுக்கிற ஒரு பெண்ணை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக் கொண்டு வரட்டுமா என்றாள் (யாத். 2 : 7).*

அழைத்துக் கொண்டு வா என்றாள் பார்வோன் குமாரத்தி (யாத். 2 : 8). கண்ணீரோடு நின்று கொண்டிருந்த அந்த சிறுமி, குழந்தையானது பார்வோன் குமாரத்தியின் கரத்தில் போய் சேர்ந்தவுடன், சிறுமிக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. துக்கமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்து போனது. எவ்வளவு துணிச்சலாகப் பேசினாள் பாருங்கள். அதுதான் மேலே உள்ள வார்த்தைகள். விழுந்தடித்துக் கொண்டுபோய் தன் தாயையே அழைத்துக் கொண்டு வந்தாள்.

மூன்று மாதக் குழந்தையான தன் சகோதரன் மீதுள்ள அன்பையும் தன் உயிரை துச்சமாக எண்ணி, செயலாற்றின துணிச்சலையும் ஒரே சமயத்தில் காணமுடிகிறது. எத்தனை வருடங்கள் தன் தாய் வீட்டில் குழந்தை வளர்ந்தது என்று வேதாகமத்தில் குறிப்பு இல்லை.

குழந்தையின் தாய் யோகெபேத், பார்வோன் குமாரத்தியிடம் கொண்டு வந்து சேர்க்கும் வரை குழந்தைக்கு பெயர் வைக்க வில்லை. பார்வோன் குமாரத்தி குழந்தைக்கு “மோசே” (நீரிலிருந்து எடுக்கப்பட்டவர்) என்று பெயரிட்டாள்.

கர்த்தர் தமது ஜனங்களை மீட்டுவர விடுதலையாளரான மோசேயை இந்த உலகத்துக்கு கொண்டு வர பாடுபட்டவர்கள் / உழைத்தவர்கள் பெண்களே. தாய் – யோகெபேத், சகோதரி மிரியாம், மருத்துவச்சிகள் சிப்பிராள் மற்றும் பூவாள் ஆகியோர் துணிவின் அடையாளமாக உள்ளனர்.

தேவனைப் போற்றி துதிக்கும் பெண் :

மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவள் தன் கையிலே தம்புரை எடுத்துக் கொண்டாள். சகல ஸ்திரீகளும் ....அவளுக்குப் பின்னே புறப்பட்டுப் போனார்கள். மிரியாம் பாடிய பாட்டு :

கர்த்தரைத் துதியுங்கள், அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். செங்கடலைக் கடந்து வந்தபின்பு இஸ்ரவேல் (யாத். 15 : 20, 21) மக்களோடு உமக்கு ஒப்பானவர் யார் என்று பாடினார்கள். அதனைத் தொடர்ந்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தரை துதிக்கும் பெண்ணாகக் காணப்பட்டார்.

தாவீது நடனமாடி, கடவுளைப் புகழ்ந்து பேசியதை அடிக்கடி நினைவு கூறும் நாம், மிரியாமின் துதிப்பாடலை அநேக சமயங்களில் கவனிப்பதும் இல்லை. முக்கியத்துவம் காட்டுவதும் கிடையாது. திருமறையில் முதல் தீர்க்கதரிசியாகவும் தம்மைப் பாடின முதல் பெண்ணாகவும் தேவன் எழுதினார்.

விடுதலைப் பயணத்தின் முக்கிய தலைவி

கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ எங்களைக் கொண்டும் பேசினதில்லையோ என்ற (எண். 12 : 2) வசனத்தைப் பார்த்தால் கர்த்தர் மிரியாமோடும், ஆரோனோடும் பேசியுள்ளார் என்று தெரிகிறது. ஆகவே, விடுதலைப் பயணத்தில் மோசே, ஆரோனோடும் சேர்ந்து மிரியாமும் ஒரு தலைவராக காணப்பட்டார் என்பது முற்றிலும் உண்மை. விடுதலைப் பயணத்தில் குடும்பமே (மோசே, ஆரோன், மிரியாம்) உறுதுணையாக நின்றது.

அதன்பிறகு எண் 20 : 1-இல் *இஸ்ரவேல் மக்கள் காதேசிலே தங்கி இருக்கையில் மிரியாம் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டாள்.* எல்லா பெண்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறார். ஒரு அடிமை சமூகத்தில் பிறந்து வாழ்ந்தாலும் துணிவோடு செயல்பட்டவராக, கடவுளை துதிப்பதற்கு சற்றும் தயங்காமல், விடுதலைப் பணியில் துணை

நின்றவராக இருந்தார். ஆகவேதான் சிறிய தீர்க்கனான மீகா. 6 : 4-இல் *''...அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுவர மோசே, ஆரோன், மிரியாம் என்பவர்களை அனுப்பினேன்''* என்று கூறப்படுகிறது.

அபிகாயில் (நாபாலின் மனைவி):

மாகோனிலே ஒரு மனிதன் இருந்தான். அவன் பெயர் நாபால். மிகுந்த செல்வந்தன், ஐசுவரியவான். அவனுடைய வீடு கர்மேலில் இருந்தது. மிகுந்த குடிகாரன். அவனுடைய தொழில் ஆடுகளுக்கு மயிர் கத்தரித்தல். 3000 ஆடும், 1000 வெள்ளாடுமாகிய மந்தை இருந்தது. தேவ பயமோ, மனிதர்களிடம் மரியாதையாகப் பேசும் எண்ணமும் இல்லாதிருந்தான். **'நான்'** என்ற எண்ணத்தில் வாழ்ந்து வந்தான்.

பாரான் வனாந்தரத்திற்கு தாவீது தன்னுடைய வேலைக்காரர்களுடன் தங்கியிருந்தான். சவுலுக்கு பயந்து வேறு ஒரு இடத்தில் தங்கியிருந்த சமயம் நாபாலின் மேய்ப்பர்களும் அங்கே இருந்தனர். அவர்களுக்கும் உணவு கொடுத்து ஆடுகளுக்கும் எந்தவொரு பாதிப்பும் வராமல் காத்துக் கொண்டான். இப்போது நாபால் கர்மேலின் மேல் தன்னுடைய ஆடுகளுக்கு மயிர் கத்தரித்துக் கொண்டிருப்பதை தாவீது கேள்விப்பட்டு, தன்னுடைய ஆட்களை அனுப்பினான்.

ஆடுகளை மயிர் கத்தரிக்கும் போது விருந்துண்பதும் வேலைக்காரருக்கும், உதவி செய்தோருக்கும் வெகுமதி அளிப்பதும் அந்நாட்களில் வழக்கமாயிருந்தது. தாவீதும் அவரது ஆட்களும் நாபாலுக்குச் செய்த உதவிகளுக்காக தாவீதின் மனிதர் நாபாலிடம் வெகுமதி கேட்கச் சென்றனர். நாபாலோ அவர்களுக்குக் கொடுக்காதது மட்டுமின்றி, மனமடிவுண்டாகும்படி பேசினான்.

நன்றி மறவாத அபிகாயில்

தாவீது அனுப்பிய மனிதர்கள் கேவலப்பட்டு தாவீதிடமே சென்றனர். வேலைக்காரர்கள் மூலமாக விஷயத்தை அறிந்த அபிகாயில், தீவிரமாய் 200 அப்பம், 2 துருத்தி திராட்ச ரசம், சமைத்த 5 ஆடுகள், 5 படி வறுத்த பயிறு, வற்றலான 100 திராட்சக்குலைகள், வற்றலான 200 அத்திப்பழ அடைகள், ஒரு வேலைக்காரன் கையிலே கொடுத்து அனுப்பினாள் (1 சாமு 25 : 18).

தாழ்மையான அபிகாயில் :

அபிகாயில் மகா புத்திசாலியும், ரூபவதியுமாயிருந்தாள் (1 சாமு 25 : 3).

Abigail was a woman of good understanding and of a beatutiful countenance (1 Samuel 25 : 3).

அபிகாயில் தாவீதை எதிர்கொண்டு சந்திக்க ஒரு கழுதையின் மீது ஏறிப் போனாள். அபிகாயில் தாவீதைக் காண்கையில் தீவிரமாய் தன் வாகனத்தை விட்டு இறங்கி, தாவீதுக்கு முன்பாக தரையில் முகங்குப்புற விழுந்து வணங்கி அவன் பாதத்திலே விழுந்து, "என் ஆண்டவனே" என்று அழைத்தாள். தான் கொண்டு வந்திருக்கும் காணிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு கூறினாள்.

புத்திசாலியான அபிகாயில்

கோபம் கொலைக்குச் சமானமானது. எகிப்திலே மோசே வாழ்ந்த போது, எபிரேயன் ஒருவனை எகிப்தியன் அடிப்பதைக் கண்டு கோபம் கொண்டு, எகிப்தியனைக் கொலை செய்து மணலில் புதைத்தான். யாக்கோபு தன்னுடைய மடலில் இவ்வாறு எழுதுகிறார்.

''...யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும்,

கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்'' (யாக். 1:19).

நம்மில் அநேகர் தமது கருத்துக்கள் முக்கியம் என்று கருதி, அவற்றை வற்புறுத்துவதிலேயே கவனமாயிருக்கிறோம். மேலும் அற்பமான காரணங்களுக்கெல்லாம் கோபப்படுகிறோம். மேலும் மற்றவர் கருத்துக்களைக் கேட்பதற்கு பொறுமையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

''நீங்கள் கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது'' (எபே. 4:26).

தாவீதின் ஆட்களை அவமானப்படுத்தி நாபால் அனுப்பியதால், தாவீது கோபம் கொண்டு பட்டயத்துடன் நாபால் இருக்கும் இடத்திற்கு தன் ஆட்களுடன் சென்றான்.

இதைக் கேள்விப்பட்ட புத்திசாலியான அபிகாயில் தாவீதோடு பேசத் துணிந்தாள். என் ஆண்டவனே இந்தப் பாதகம் என்மேல் சுமரட்டும். உம்முடைய அடியாளுடைய வார்த்தைகளை நீர் கேட்கும் பொருட்டாக உம்முடைய அடியாள் உமது செவிகேட்க பேச வேண்டும். என் ஆண்டவனே நீர் இரத்தம் சிந்த வரவும், உம்முடைய கை நீதியைச் சரிகட்டவும், கர்த்தர் உமக்கு இடம் கொடுக்கவில்லை. உமது அடியாளின் பாதகத்தை மன்னித்து, நான் கொண்டு வந்திருக்கும் காணிக்கையை ஏற்றுக் கொள்வீராக என்றாள்.

இஸ்ரவேலுக்கு அதிபதியாக கர்த்தர் உம்மை நியமிக்கும் போது நீர் விருதாவாய் இரத்தம் சிந்தாமலும், பழிவாங்கமாலும் இரும். கர்த்தர் உமக்கு நன்மை செய்யும்போது உம்முடைய அடியாளை நினைப்பீராக என்றாள். அதன் பின் தாவீது கோபம் தணிந்து, அவள் கொண்டு வந்த காணிக்கையை தாவீது வாங்கிக் கொண்டான். நாபால் மரித்தபின்பு, அபிகாயிலை தன் மனைவியாக்கிக் கொண்டார் தாவீது.

ஏற்கனவே உரியாவைக் கொன்று கர்த்தரின் கோபத்திற்கு ஆளானார். அபிகாயில் மூலமாக தாவீது நாபாலிடம் பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிட்டார்.

பெண்களாயிருந்தாலும் எபிரேய ஆண் குழந்தைகளை காப்பாற்றுவதில் பார்வோனுக்கு பயப்படாமல் தேவனுக்குப் பயந்து வாழ்ந்தார்கள். தீமையை தீமையினால் வெல்லாமல் நன்மையினால் வென்றார்கள்.

மிரியாம் கர்த்தரைத் துதிப்பதில் முதலிடம் வகித்தாள். தான் மாத்திரம் இல்லாமல் எல்லாப் பெண்களையும் தம்புரு வாசித்து நடனமாடி கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணினக் காரியத்தை நாம் ஒரு போதும் மறக்க வேண்டாம்.

ஞானமுள்ள, புத்திசாலி மற்றும் சமயோசித புத்தியுள்ள அபிகாயில் என்ற ஒரு பெண், தாவீது ராஜாவுக்கு ஒரு மனமாற்றத்தைக் கொண்டுவரக் காரணமாயிருந்தாள். பழிவாங்கும் எண்ணம் மனிதராகிய நம் உள்ளத்தில் வரவே வேண்டாம். தீங்கு செய்து, ஆயுள் தண்டனைக் கைதியாக இருப்பதைக் காட்டிலும், யாக்கோபைப் போல் சமாதானமாக இருந்து நாம் என்றென்றும் சந்தோஷமாக கர்த்தர் முன் நிற்போமாக!

ஆமென்!

– திருமதி. பேர்ல் குயிலி ராஜா

ஆசிரியர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால், சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்' (ரூத். 2 : 12).

எலிமெலேக்கு என்னும் ஒரு மனுஷன் யூதா தேசத்தில் உண்டான பஞ்சத்தின் நிமித்தம் தன் மனைவி நகோமி மற்றும் இரண்டு குமாரர்களோடு மோவாப் தேசத்தில் போய் சஞ்சரித்தான். அங்கே போன சிறிது காலத்திலே எலிமெலேக்கு இறந்து போனான். அவனுடைய இரண்டு குமாரர்களும் மோவாபியப் பெண்ணை திருமணம் செய்து கொண்டார்கள். ஒருத்தி பேர் ஓர்பாள், மற்றவள் பேர் ரூத். ஏறக்குறைய 10 வருடங்கள் கழித்து, எலிமெலேக்கின் இரண்டு குமாரர்களும் மரித்துப் போனார்கள். ஓர்பாள் தன் மாமியாகிய நகோமியை விட்டு பிரிந்து போனாள். ரூத்தோ நகோமியை விட்டுப் பிரிய மனதில்லாமல் “உம்முடைய தேவன் என்னுடைய தேவன்” என்று சொல்லி அவளுடனே மோவாபிலிருந்து பெத்லெகேமுக்கு திரும்பி வந்தாள். அங்கே எலிமெலேக்கின் உறவின் முறையான போவாஸ் என்பவனுடைய வயல்களில் கதிர்களை பொறுக்கிக் கொண்டு வந்தாள். போவாஸ் ரூத்தின் நற்குணத்தைக் கண்டு அவளை விவாகம் பண்ணிக் கொண்டான். அவர்களுக்கு ஒரு குழந்தைப் பிறந்தது. அதின் பேர் ஓபேத். அந்த ஓபேத் ஈசாயைப் பெற்றான், ஈசாய் தாவீதைப் பெற்றான்.

பெத்லகேம் என்பதற்கு “அப்பத்தின் வீடு” என்று பொருள். மோவாப் முறையற்ற மற்றும் தவறான உறவில் பிறந்த சந்ததி. மோவாபிய தேசம் பாவங்கள் நிறைந்த அருவருப்பான தேசம். எலிமெலேக்கு யூதா தேசத்தில் பஞ்சம் உண்டான போது, தற்காலிக சூழ்நிலையைக் கண்டு கர்த்தருடைய தேசத்தை விட்டு மோவாபிற்கு போனான். அதிலிருந்து அவனுடைய குடும்பத்தில் ஆண் மக்கள் யாவரும் மரித்துப் போனார்கள். அவனுடைய சந்ததியும் அற்று போயிற்று. நாமும் நம்முடைய கஷ்ட காலங்களிலே ஆண்டவரை விட்டு பிரிந்து போகிறோம். ஜெபக் குறைவு, வேத வாசிப்பு இல்லாமை, அவிசுவாசம், முறுமுறுப்பு என்று தேவனை விட்டு பிரிந்து போகும் பொழுது, நமக்குண்டான ஆசீர்வாதங்களை இழந்து போகிறோம். கர்த்தர் நம்முடைய ஜனங்களை சந்தித்து, அவர்களை போஷிக்கிறார் என்று நகோமி கேள்விப்பட்டு மோவாபிலிருந்து பெத்லெகேமுக்கு திரும்பி வந்தாள். கர்த்தருடைய இடத்திற்கு திரும்பி வந்ததின் நிமித்தம் நகோமியின் வம்சத்தை போவாஸ் மூலமாய் கர்த்தர் ஆசீர்வதித்து, அந்தச் சந்ததியில் தாவீது இராஜாவை பிறக்கப் பண்ணினார்.

இதைப்போலவே இயேசு கிறிஸ்து கூறிய உவமையில் இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அதில் இளையவன் தன் தகப்பனுடைய ஆஸ்தியில் தன் பங்கை வாங்கிக் கொண்டு, தூர தேசத்திற்குப் போய் அங்கே துன்மார்க்கமாய் ஜீவியம் செய்து, தன் ஆஸ்தி முழுவதையும் அழித்துப் போட்டான். அந்த தேசத்தில் பஞ்சமுண்டாயிற்று. வயல்களில் பன்றியை மேய்க்கிற வேலையைச் செய்தான். பன்றிகள் தின்கிற தவிட்டைத் தின்ன ஆசையாயிருந்தான். ஆனாலும், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை. அப்பொழுது அவன் புத்தி தெளிந்து, தன் தகப்பன் வீட்டிற்கு திரும்பி வந்தான். இளைய மகன் தூரத்திலே வருவதைக் கண்ட தகப்பன் ஓடிவந்து, கட்டிக் கொண்டு முத்தம் செய்தான். அவனுக்கு மோதிரம், உயர்ந்த வஸ்திரம், பாதரட்சை கொடுத்து மகிழ்ந்திருந்தான். எனவே, நாமும் நம் கால சூழ்நிலையின் நிமித்தம், ஆசீர்வாதமான வாழ்வை விட்டு, சுயமான முடிவை அவசரப்பட்டு எடுக்காமல், தேவசித்தம் அறிந்து வாழ்ந்து, ஆசீர்வாதம் பெறுவோம்.

"...உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்'' (யோவேல் 2:13).

IBT-இன் வருடாந்தர உபவாசக் கூடுகை கோவை IBT மையத்தில் கடந்த மே மாதம் 9, 10 ஆகிய தேதிகளில் நடந்தது. 9-ஆம் தேதி காலை, முதல் கூடுகையில் Rev. ஜான்ராஜா ஐயா அவர்களும், மதியம் 2-ஆம் கூடுகையில் IBT-இன் செயலாளர் திரு. வரமணிராஜ் அவர்களும் தேவ செய்தியளித்தார்கள். அடுத்த நாள் 10-ஆம் தேதியன்று திருப்பூர் பிரதிநிதி சகோ. ராஜகுமார் அவர்கள் தேவசெய்தியளித்தார். இக்கூடுகையில் தமிழ்நாடு, கேரளாவிலுள்ள IBT ஊழியர்கள், பிற ஊழியங்கள் மற்றும் பொதுவான ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. ஊழியர்கள் தங்கள் பணிகளைக் குறித்து விளக்கினார்கள். இக்கூடுகை 10-ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு நிறைவுபெற்று, பங்கு பெற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இதே மாதம் 9-ஆம் தேதி முதல் 14-ஆம் தேதி வரை ஒடிஷா மாநிலம் பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற மொழிபெயர்ப்பாளர்களுக்கான சரிபார்பபுப் பணியில் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், ஒடிஷா, கர்நாடகா, ஆகிய மாநிலங்களிலுள்ள மொழிபெயர்ப்பாளர்கள், IBT பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள், அலுவலக ஊழியர் திரு. எஸ்றா காலேப் ஆகியோரும் பங்கு பெற்றார்கள். இதை IMS மிஷனெரி திருமதி. கிரிஜா ஐசக் அவர்கள் மேற்பார்வை செய்து ஆலோசனை அளித்தார். இதே மாதம் 26-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை பெங்களூர் BSI-இல் சித்தி மொழியில் புதிய ஏற்பாடு சரிபார்ப்பு நடைபெற்றது. இதில் மொழிபெயர்ப்பாளர் சகோ. பிரகாஷ் கலந்து கொண்டார்.

IBT மூலமாக செயல்பட்டுவரும் மொழிபெயர்ப்புப் பணிகளுக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள். அடுத்த லோகோஸ் முகாமில் சில மொழிகளில் வேதாகமம் மற்றும் புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள் புத்தகங்களை வெளியிடத் தீர்மானித்து, பணிகள் நடந்து வருகின்றன. இதற்காகவும் ஜெபியுங்கள். கர்த்தர் பரத்திலிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தையும் அளவில்லாமல் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

ஷாலோம்!

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன்
K. ஜெய்சிங்

எமது தரிசனமும், எமது பணியும்

<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"

<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.

கோபம் பரம்பரை சொத்தா? வியாதியா?

கோபம் ஒருவரிடத்தில் காணப்பட்டால், இந்த கோபக்குணம் எங்களுக்கு பரம்பரை சொத்து என்று சிலர் சற்று பெருமையாக கூறுவது உண்டு. இது ஒருவகை மூடத்தனம் மாத்திரமல்ல, முட்டாள்தனம். இப்படி பரம்பரை பரம்பரையாக வளரும் கோபக்குணத்தை நாம் ஒரு 'நொண்டிச் சாக்காக' பயன்படுத்தாமல் இந்த பரம்பரை பாவ குணத்தை ஒரு சிவப்பு எச்சரிப்பாகக் கருதி, நமக்கு வரும் கோபத்தை, அதாவது, நமது பரம்பரை கோபத்தை தவிர்க்க நாம் முயற்சி எடுக்க வேண்டும். உதாரணமாக இருதய நோய், வாதம், மூட்டுவலி, கால்வலி போன்ற சில வியாதிகள் பரம்பரையாக வருமானால் நாம் என்ன செய்வோம்? அடுத்த பரம்பரையினருக்கு அதை எச்சரித்து, இந்த வியாதி வராமல் இருக்க தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும்படியாக ஆலோசனை கூறுவோம்.

இரண்டு வாலிபப் பெண்கள் ராணி, மேரி இருவரும் பேசிக்கொண்டிருந்த போது, ராணி மேரியைப் பார்த்து, "நானும் கவனித்திருக்கிறேன். நீ எப்பொழுதும் பொறுமையாக, கோபப்படாமல் இருக்கிறாய், எப்படி உன்னால் இப்படி இருக்க முடிகிறது? இதன் ரகசியம் என்ன? – என்று ராணி மேரியைப் பார்த்து கேட்டாளாம். அதற்கு மேரி கொடுத்த பதில் – "ராணி என் குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாக கோபமாக, மூர்க்கமாகவே எல்லோரும் நடந்திருக்கிறார்கள். என் தாத்தா, என் பாட்டியை கோபத்தில் அடித்து, வாழ்நாள் முழுவதும் முடமாக மாறிவிட்டார்கள். சாகும் வரைக்கும் என் தாத்தாவும், பாட்டியும் முகம் கொடுத்து பேசியதே இல்லை.

அதேபோல என் அப்பாவும் கோபம் வந்து விட்டால், என் அம்மாவை பலமுறை கன்னா பின்னா என்று கண்காது தெரியாமல் அடிப்பது வழக்கம். என் அப்பா தெருமுனையில் வருகிறார் என்றால், பிள்ளைகள் அனைவரும் ஓடி ஒளிந்து கொள்வோம்.

என் தாத்தாவும், என் அப்பாவும் இப்படிப்பட்ட கோபப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் நானும் அப்படிப்பட்ட கோபத்திற்கு இலக்காகி விடக்கூடாது என்று என் சிறு வயதிலிருந்தே என்னை நானே எச்சரித்து, எனக்கு கோபம் வரும்போதெல்லாம் என் தாத்தாவையும், சாகும்வரை முடமாகக் கிடந்த என் பாட்டியையும், என் அப்பாவை சிம்ம சொப்பனமாக நினைக்கும் என் அம்மாவையும் நினைத்து, என் கோபத்தை நானே கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர கொஞ்சம், கொஞ்சமாக பழகிக் கொண்டேன்.

அது மாத்திரமல்ல, ஒரு நாள் நான் ஆண்டவரிடத்தில் என்னை ஒப்புக் கொடுத்து "இயேசுவே, கோபம் எனது பரம்பரை வியாதி. என்னுடைய கோபத்தை நான் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக, என்னையே நீர் உமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வாரும்" என்று ஜெபித்தேன். அந்த நாளிலிருந்து இந்த நாள் வரை என் கோபம் தலை தூக்கவில்லை. எல்லா சூழ்நிலையிலும் நான் பொறுமையாக இருக்கிறேன். இதுதான் என் "பொறுமையின் ரகசியம்" என்று மேரி தனது தோழி ராணியிடம் சாட்சி சொன்னாளாம்.

என்ன அருமையான, அனுபவபூர்வமான, நடைமுறை சாட்சி. அதுவும் ஒரு 20 வயது பெண்ணிடமிருந்து வருகிறது. இதை வாசிக்கிற நீங்கள் ஒரு கோபக்காரராக இருந்தால், தயவு செய்து உங்கள் கோபத்தை நியாயப்படுத்தாதீர்கள். உங்கள் கோபத்தில் அனல் பறக்குமானால், அந்த அனல் தரையில் விழுவதற்கு முன்பு அது ஒரு மின்னலாக, இடியாக மாற நிறைய வாய்ப்பிருக்கிறது.

கோபம் உங்கள் கண்களை மூடும்போது, நீங்கள் குருடராகிவிடுகிறீர்கள். உங்கள் கோபம் தணிந்த பின்பு, நீங்கள் பேசியது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை உணருவீர்கள்.

கோபத்தை தடுப்பதற்கு ஒரு சிறந்த வழி கோபம் வரும்போது நீங்கள் பேசாமல் இருப்பது.

கோபத்தோடு நீங்கள் படுக்கைக்குச் சென்றால், உங்களோடு பிசாசும் படுத்துக் கொள்வான்.

ரோமப் பேரரசன் ஜூலியஸ் சீசர் தனக்கு கோபம் வரும் போது – என்ன செய்வார் தெரியுமா? தனது ரோமர் மொழியில் உள்ள எழுத்துக்களை Alphabets-ஐ A,B,C,D... என்று சொல்ல ஆரம்பிப்பாராம். X,Y,Z-என்று சொல்லி முடிக்கும்போது அவரது கோபம் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு போய்விடுமாம்.

நீங்களும் கோபம் வரும்போது இந்த ஜூலியஸ் சீசர் முறையை பின்பற்றலாம்.

உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங் கொள்ளாதே. மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும் (என்ற உண்மையை மறவாதே) பிரசங்கி 7 : 9.

பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் (நீதி. 16 : 32).

"உயிருள்ள உதாரணங்கள்" என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

உலகச் செய்திகள்

1. அமெரிக்காவைச் சேர்ந்த கார்டினல் ராபர்ட் பிரான்சிஸ் பரிவோஸ்ட் (69) வாடிகனில் கடந்த மே மாதம் 8-ஆம் தேதியன்று நடைபெற்ற கார்டினல்களின் கூட்டத்தில் கத்தோலிக்கச் சபையின் 267-வது தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

2. இந்திய ராணுவ நடவடிக்கையில் 40 பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழப்பு.

3. சண்டை நிறுத்தத்தை மீறி, பாகிஸ்தான் படையினர் தாக்குதல் நடத்தினால் உரிய பதிலடி கொடுக்க இந்திய ராணுவ கமாண்டர்களுக்கு தலைமைத் தளபதி உபேந்திர துவிவேதி முழு அதிகாரம் அளித்துள்ளார்.

4. கனடாவின் புதிய அமைச்சரவையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனிதா ஆனந்த் வெளியுறவு அமைச்சராகவும், மனீந்தர் சிந்து சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேபோல் அந்நாட்டில் சர்வதேச வளர்ச்சித் துறைச் செயலாளராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரண்தீபசாராய் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. மத்திய கிழக்குப் பகுதிகளில் நிழல் ராணுவமாகச் செயல்பட்டு வரும் ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு அளிப்பதை ஈரான் கைவிட்டால்தான் அந்த நாட்டுடன் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

IBT சென்னை குடும்பக் கூடுகை - 1.4.2025

ஆண்டவருடைய பெரிதான கிருபையினால் கடந்த மே மாதம் 1-ஆம் தேதியன்று நம்முடைய IBT-இன் குடும்பக் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. ஆரம்ப ஜெபத்தை சென்னையிலுள்ள IBT பிரதிநிதி சகோ. கிறிஸ்டோபர் அவர்கள் ஜெபிக்க, மாலை 6.00 மணிக்கு கூடுகை துவங்கியது.

துதி பாடல் மற்றும் ஆராதனை: சென்னை ஷாலோம் ஊழியங்கள் சபை ஊழியர் Rev. ஆரோக்கியராஜ் மற்றும் சபை உறுப்பினர் நடத்தினார்கள்.

IBT President திரு. P. ஜெபஸ் செல்வின் அவர்கள், கூடுகைக்கு வந்தவர்களை வாழ்த்து தெரிவித்து வரவேற்றார். சௌராஷ்ட்ரா மொழிபெயர்ப்பாளர் திரு. சங்கர் அவர்கள், சௌராஷ்ட்ரா மொழியில் பரிசுத்த வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு குறித்தும், பரிசுத்த வேதாகமத்தை வெளியிடும்போது ஏற்பட்ட தடைகளை நம் ஆண்டவர் எப்படி ஆசீர்வாதமாக மாற்றி, தேவன் வழிநடத்தினதை சாட்சி பகிர்ந்தார். மற்றும் ஒடிஷா சிறுவர் இல்ல மிஷனெரி சகாய ஸ்வீடன் அவர்கள், ஒடிஷா பாப்பன்பள்ளியிலுள்ள சிறுவர் இல்லத்தின் காரியங்களை விவரித்துக் கூறினார்.

ஊழிய விளக்கம் படக்காட்சி : IBT ஊழியம் & மொழிபெயர்ப்பு குறித்து படக்காட்சி மூலமாக, திரு. ஜாண்சேகர் மற்றும் திரு. எஸ்ரா இருவரும் விளக்கம் அளித்தனர்.

புதிய மொழி கண்டுபிடிப்பு : திரு. சாமுவேல் ஞானதாஸ் Field Director அவர்கள் இலங்கை தேசத்தில் வேடர் மலைவாழ் மக்கள் மற்றும் ராஜஸ்தானிலுள்ள Bheeli மொழியில் பரிசுத்த வேதாகமத்தை மொழிபெயர்ப்பு செய்ய வேண்டியதைக் குறித்த விளக்கத்துடன் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

சென்னை பிரதிநிதி திரு. பிரபு கூடுகைக்கு வந்தவர்களை ஏதாவது ஒரு விதத்தில் இணையும்படி கேட்டுக்கொண்டார்.

குறு நாடகம்: “தேவன் விரும்பும் குடும்பம்” என்ற தலைப்பில் ஷாலோம் ஊழியங்கள் சபையினர் குறு நாடகம் நடித்தனர்.

வேத பாட வாசிப்பு: சென்னையின் முன்னேற்றப் பணியாளர் திரு. K. சுந்தர் அவர்கள் வேத பாடம் வாசித்தார்.

தேவசெய்தி: Rev. ராஜு, St. Thomas Church Urapakkam, யோவான் 6 : 9-13 வசனத்தை ஆதாரமாக வைத்து கர்த்தரின் ஊழியத்திற்கு கொடுப்பதன் ஆசீர்வாதத்தைக் குறித்து வல்லமையான தேவ செய்தியளித்தார்.

கூடுகைக்கு வந்த அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. IBT Treasurer திரு. ஜான் வில்லியம் அவர்கள் கூடுகைக்கு வந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பாஸ்டர். ஞானசேகர் அவர்கள் முடிவு ஜெபத்தை ஏறெடுத்து, ஆசீர்வாதம் கூறி, கூடுகை நிறைவு பெற்றது.

ஆண்டவருடைய பெரிதான கிருபையால் இந்த கூடுகையில் 120 பேர் கலந்து கொண்டனர். வந்த எல்லோருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

– சகோ. பிரபு
சென்னை IBT பிரதிநிதி

பணித்தளச் செய்திகள்

மொழிபெயர்ப்பாளர் :
சகோதரி. தேவேஷ்குமாரி
மொழி : பண்டேலி
பணித்தளம் : சட்டர்ப்பூர் (மத்தியப்பிரதேசம்)

தேவனுக்கே துதி உண்டாவதாக!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதம் பண்டேலி மொழியில், புதிய ஏற்பாடு பகுதியில் 1 தீமோத்தேயு அதி. 3 : 16-ஆம் வசனம் முதல் அதி. 5 : 25-ஆம் வசனம் வரையிலும், 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், எபிரேயர், யாக்கோபு, I பேதுரு, II பேதுரு, I யோவான், II யோவான், III யோவான், யூதா மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் அதி. 14 : 20-ஆம் வசனம் வரையிலும் மொழி சரிபார்ப்பு செய்யப்பட்டன.

சட்டர்ப்பூர் பணித்தளத்தில் நடத்தப்பட்ட உபவாச ஜெபக்கூட்டத்தில் IBT தலைவர், அலுவலர்கள், அனைத்து ஊழியர்கள், சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகள் மற்றும் நடந்து வரும் அனைத்துப் பணிகளுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. ஞாயிறு ஆராதனை கௌதம் நகரிலும், சட்டர்ப்பூரிலும் நடத்தப்பட்டன. என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :
சகோ. ரூபன் அந்தாரு
மொழி : தெஷியா
பணித்தளம் : மாலி அட்டிகான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக தெலிகுடா, கனகுடா, கெண்டுகுடா, அட்டிகான், கோண்டாபுரி, நங்கநால், கொசகமுடா, பிரஜகுடா, கசுமி, ரஜோடா, அடிபசிகுடா, இன்னும் சில கிராமங்களுக்குச் சென்று, நற்செய்தியை அறிவித்து கைப்பிரதிகளைக் கொடுத்து, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். சகோ. ரூபன், மோஹன் மற்றும் சகோதரி மார்த்தாள் ஆகியோர் மிகவும் வாஞ்சையுடன் செய்தியைக் கேட்டார்கள். விசுவாசிகள் வீட்டிற்குச் சென்று, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தெஷியா புதிய ஏற்பாடு புத்தகத்தை எப்படி வாசித்து, புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கிக் கூறினேன். கல்வி கல்லாத சிறுவர்களுக்கு எழுத்தறிவுப் பணியும் செய்தேன். 7 பேர் கலந்து கொண்டார்கள். ஞாயிறு ஆராதனைகளை அட்டிகான், பமுனி, அடிபசிகுடா மற்றும் கொடவாதா ஆகிய 4 இடங்களில் நடத்தினேன். என்னுடைய மிஷனெரிப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

மொழிபெயர்ப்பாளர் :
சகோ. K. சாமுவேல்
மொழி : இருளா (வெள்ளியங்காடு)
பணித்தளம் : வட்டலக்கி (கேரளா)

தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

இயேசு கிறிஸ்துவின் பெரிதான கிருபையால் இருளா வெள்ளியங்காடு மொழியில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்ட புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்களை வாங்கியவர்களைச் சந்தித்து அவர்கள்

இப்புத்தகங்களை பயன்படுத்துகிறார்களா என்பதை அறிந்து கொள்ளவும், அதை எப்படி வாசித்து புரிந்து கொண்டு பயன்பெறுவது என்பதை விளக்கும்படியாகவும் சென்றோம். படிப்பவர்களை உற்சாகப்படுத்தினோம். இதில் பெண்கள் மட்டுமே அதிக வாஞ்சையுடன் இருக்கிறார்கள். அதிகப்படியான ஆண்கள் மதுபானத்திற்கு அடிமைப்பட்டு தங்களைக் கெடுத்து, குடும்பத்தின் மன நிம்மதியையும் கெடுத்து வருகிறார்கள். ஒருசில பெண்களும் தற்போது மதுபானத்திற்கு அடிமைகளாக இருக்கிறார்கள். இருளான வாழ்க்கை இவர்களிடமிருந்து மாற, ஒளியாகிய கர்த்தர் இவர்களுக்குள் வாசம் செய்து, இவர்கள் வாழ்வை பிரகாசிக்கச் செய்ய ஜெபியுங்கள்.

----------•----------

மொழிபெயர்ப்பாளர் : சகோ. சுதிர்குமார்
மொழி : போஜ்புரி
பணித்தளம் : பெல்த்ரா ரோடு (உ.பி.)

கர்த்தருக்குள் அன்பானவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதத்தில் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பகுதியில் மத்தேயு அதிகாரம் 12 : 1 முதல் அதி. 28 : 20 வசனம் வரையிலும், மாற்கு அதி. 1 முதல் 16 வரையிலும் லூக்கா அதி. 1 முதல் அதிகாரம் 8 : 56-ஆம் வசனம் வரையிலும் மொழி சரிபார்ப்புப் பணி முடிக்கப்பட்டது. ஈஸ்டர் தினத்தன்று பெல்த்ரா ரோடு, IBT பணித்தள ஆலயத்தில் ஈஸ்டர் ஆராதனை ஆசீர்வாதமான முறையில் நடத்தப்பட்டது. 350 விசுவாசிகள் ஆலயத்திற்கு வந்து வழிபட்டு சிறப்பித்தார்கள். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக. அந்த நாள் சபை மக்களுக்கு மட்டுமின்றி எனக்கும் மிகுந்த மகிழ்ச்சிகரமான நாளாயிருந்ததற்காக தேவனைத் துதிக்கிறேன். ஊழியங்கள், ஊழியர்களுக்கு வரும் தடைகள், தொல்லைகள் மாறவும், தேவ நாமம் மகிமைப்படவும் நற்செய்தி அறிவிக்காத இடங்களுக்கெல்லாம் அறிவிக்கப்படவும், என் மொழிபெயர்ப்புப் பணி தடையின்றி நடந்தேறவும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :
சகோ. சுனில்குமார் சபாடி
மொழி : கடபா
பணித்தளம் : கெல்லகூடா (ஒடிஷா)

தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில், பாராடெக்ஸ்டில் மாற்றப்பட்ட புதிய ஏற்பாடு புத்தகம் மற்றும் சங்கீதம், நீதிமொழிகள் சரிபார்ப்புச் செய்தேன். புதிய ஏற்பாட்டில் மத்தேயு நற்செய்திப் புத்தகம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலுமுள்ள 27 புத்தகங்களும் பாராடெக்ஸ்டில் மாற்றப்பட்டதை சரிபார்ப்பு மற்றும் கீழ்குறிப்புகள் செய்யப்பட்டன. பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் புத்தகம் அதிகாரம் 1 : 1 முதல் அதி. 3 : 25-ஆம் வசனம் வரையிலும் கணினியில் கீ-இன் செய்தேன்.

மிஷனெரிப் பணிக்காக பத்மநிலா, கெஜாரா கோட்டா, மோடிகுடா ஆகிய இடங்களுக்குச் சென்று நற்செய்தியைக் கூறி, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். சகோ. பிரதாப் ஜான், சகோ. திரிநாத் மற்றும் சகோ. பசுபன் ஆகியோர் மிகவும் வாஞ்சையுடன் ஊழியத்தைக் குறித்துக் கேட்டு அறிந்தார்கள். கடபா மொழியில் புதிய ஏற்பாடு விரைவில் அச்சிடும் நிலைக்கு வந்துள்ளதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். கர்த்தர் இவர்கள் குடும்பங்களையும், என் மொழிபெயர்ப்புப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஒரு முக்கிய வேண்டுகோள்

<u>தேவை</u>

★ கோவை IBT கட்டிடத்திலுள்ள Meeting Hall-இல் கூட்டங்கள் நடத்தப்படும் போது, சப்தம் வெளியே சென்று, அருகாமையிலுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாவண்ணம் Meeting Hall-ற்கு Sound Proof System மற்றும் தகுந்த மாற்றங்கள் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இப்பணிகளுக்கு ரூ. 4,50,000/- முதல் ரூ. 5,00,000/- வரை செலவு ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை சந்திக்க தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ திருச்சி மற்றும் சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளர்களுக்கு 2 இருசக்கர வாகனங்கள் தேவைப்படுகின்றன. தற்போதுள்ள பழைய வாகனங்களின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனங்கள் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 2,20,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

– பொருளாளர், IBT

மிஷனெரி குழந்தைகளுக்குக் கல்வி நிதி

IBT இயக்கமானது ஒவ்வொரு ஆண்டும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறதை நீங்கள் அறிவீர்கள். 2025-26 ஆம் கல்வி ஆண்டிற்கு பிள்ளைகளின் படிப்பிற்காக உதவித் தொகை ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிறது. IBT பங்காளர்கள், சத்திய வார்த்தை வாசகர்கள் மற்றும் ஊழிய பாரம் கொண்ட அனைவரும் மனமுவந்து உற்சாகத்துடன் நிதி உதவி வழங்கி பிள்ளைகளின் படிப்பிற்கான செலவுகளைத் தாங்க முன் வாருங்கள்.

– பொருளாளர், IBT

கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

1.	வானத்தின் வாசல்	ரூ. 70/-	9.	Word of Life (ஆங்கிலம்)	ரூ. 100/-
2.	வானத்தின் மன்னா	ரூ. 70/-	10.	Word of Life (மலையாளம்)	ரூ. 100/-
3.	பயப்படாதிருங்கள்	ரூ. 70/-	11.	Introduction to the Books of the Bible	ரூ. 70/-
4.	வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்	ரூ. 60/-	12.	Defeat the Despair (ஆங்கிலம்)	ரூ. 100/-
5.	உயிருள்ள உதாரணங்கள்	ரூ. 60/-	13.	Seeds for the Good Soil (ஆங்கிலம்)	ரூ. 120/-
6.	பாருக்குள் பரலோகம்	ரூ. 100/-	14.	சத்திய வார்த்தையின் முத்துக்கள்	ரூ. 120/-
7.	விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி	ரூ. 100/-	15.	இதய கீதங்கள் (பாடல் புத்தகம்)	ரூ. 60/-
8.	தேவ சத்தம்	ரூ. 100/-			

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. <u>STATE BANK OF INDIA</u>

A/c. No.	:	30008395600
Name	:	Indian Bible Translators
Branch Code	:	7231
Branch	:	Peelamedu
IFS Code	:	SBIN0007231

2. <u>INDIAN BANK</u>

A/c. No.	:	475742259
Name	:	Indian Bible Translators
Branch Code	:	S107
Branch	:	Peelamedu
IFS Code	:	IDIB000S107

SCAN & PAY

Merchant Name : Indian Bible Translators

UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. லம்பானி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு முதல் பேஜ் செட்டிங் செய்யப்பட்ட Printout மொழிபெயர்ப்பாளருக்கு அனுப்பப்பட்டு சரிபார்ப்புப் பணி நிறைவு பெற்று, விக்லிப் இந்தியா நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். விரைவாக, இறுதி சரிபார்ப்பு செய்து அச்சிட ஜெபியுங்கள்.

2. படுகா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள் ஆகியன ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள் (Audio Devices) திட்டமிட்டபடியே கடந்த மாதம் 14.6.2025 அன்று கோத்தகிரி, CSI புனித லூக்கா ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து வெளியிடப்பட்டது. இதில் IBT ஊழியத்தின் தலைவர், செயலர், பொருளர், பெங்களூரிலிருந்து வந்த WCOI நிறுவனர், இயக்குநர் மற்றும் படுகா பாஸ்டர்கள் பங்கு பெற்றதற்காக கர்த்தரைத் துதியுங்கள். ஒலிப்பதிவு கருவிகளை வாங்கிய மக்கள் அனுதினமும் கேட்டு, கர்த்தருக்குள் வளர ஜெபியுங்கள்.

3. பேஜ்செட்டிங் முடிக்கப்பட்ட கோண்டாபொர்ஜா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு Printout, மொழி பெயர்ப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதற்காக கர்த்தரைத் துதியுங்கள். மொழிபெயர்ப்பாளர் சகோ. நாராயணபூரியா தாமதமின்றி சரிபார்ப்பு செய்து, பிரஸ்ஸிற்கு அனுப்ப ஜெபியுங்கள்.

4. கடபா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு பேஜ்செட்டிங் முடிக்கப்பட்டு, Printout-ஐ மொழி பெயர்ப்பாளர் சகோ. சுனில்குமார் சபாடிக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அதை சரிபார்த்து, பிரஸ்ஸிற்கு அனுப்பப்பட ஜெபியுங்கள்.

5. அடுத்த IBT-இன் திட்டக் கூடுகை, இம்மாதம் 19, 20 தேதிகளில் கோத்தகிரியிலுள்ள High Field - UESI Conference Centre-இல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 20-ஆம் தேதியன்று IBT முன்னேற்றக் கூட்டங்கள் மூன்று சபைகளில் நடத்த சந்தர்ப்பம் கிடைத்ததற்காக துதியுங்கள். IBT ஊழியம் அறிமுகமாகாத சபைகளில் IBT ஊழியம் அறிமுகப்படுத்தப் படவும், ஊழியத்தின் எல்லைகள் விரிவாக்கப்படவும், இளைஞர்கள் ஆர்வத்துடன் இணைந்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தவும் ஜெபியுங்கள்.

SEND ALL YOUR CONTRIBUTIONS

Cheques / DD / M.O. to

INDIAN BIBLE TRANSLATORS

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
Web : www.ibtword.com

சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/–

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

WORD PUBLISHERS TRUST

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

தொடர்பு எண். 90470 57414.

BANK DETAILS

CENTRAL BANK OF INDIA

A/c. No.	:	1630413107
Name	:	Word Publishers Trust
Branch	:	Kalapatti
IFS Code	:	CBINO282057

SCAN & PAY

Address :

WORD PUBLISHERS TRUST
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Editor & Published by On behalf of	**Mr. K. JAISINGH** **WORD PUBLISHERS TRUST** 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Printed by	**Mr. C.K. VENKATESH** Chandra Prabha Press 113-118, V.H. Road, CBE-1.

SATHTHIYA VAARTHAI - TAMIL

Date of Publishing : 2nd & 3rd July 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)

RNI No. 82166